# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 243/33—1976 දෙසැම්බර් 17 වැනි සිකුරාදා—1976.12.17

243/33 ம் இலக்கம் — 1976 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 17 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச. அ. எண் : டபிளியு. 68(70)/76.

**(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டம்**

பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ் முதலமைச்சரின் விதப்புரையின்மீது சனாதிபதியினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

சனாதிபதியின் அலுவலகம்,
கொழும்பு,
1976 திசெம்பர் 17 ஆந் தேதி.

**வி. கொபல்லவ,**
சனாதிபதி.

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள், (தோட்ட வேலையாட்கள் உத்தரவாத ஆகக் குறைந்த கூலி) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (1) (அ) இவ்வொழுங்குவிதிகளின் நோக்கங்களுக்காக ஆணையாளரே தகுதிவாய்ந்த அதிகாரியாக இருத்தல் வேண்டும்.

(ஆ) தகுதிவாய்ந்த அதிகாரி, இவ்வொழுங்குவிதிகளினால் அத்தகைய அதிகாரிக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட ஏதேனும் தத்துவம், பணி அல்லது கடமையைத் தொழில் திணைக்களத்தின் அலுவலர் எவருக்கேனும் கையளிக்கலாம்.

(2) ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் தோட்டத்தில் வைத்திருக்கப்படும்படி தேவைப்படுத்தப்பட்டுள்ள ஏதேனும் இடாப்பை, கூலிகள் பதிவேட்டை அல்லது பெயர் இடாப்பை பரிசோதிப்பதற்கென, அல்லது இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கு இணங்கி ஒழுகப்படுகின்றதா என்பதை நிச்சயிப்பதற்கென அத்தகைய தோட்டத்தில் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ள எவரேனும் வேலையாளைப் பரிசோதிப்பதற்கென தகுதிவாய்ந்த அதிகாரி ஏதேனும் தோட்டத்தில் பிரவேசிப்பதற்குத் தத்துவம் உடையவராதல் வேண்டும்.

(3) இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளானவை, வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் அல்லது வாய் மூல அல்லது எழுத்திலான அல்லது வெளிப்படையான அல்லது உட்கிடையான தொழில் ஒப்பந்தம் எதிலும் எது எப்படி இருந்த போதிலும், வலுவும் பயனும் உள்ளனவாக இருத்தல் வேண்டும் என்பதோடு அதற்கிணங்க இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கும் அத்தகைய வேறு சட்டத்தின் அல்லது ஒப்பந்தத்தின் ஏற்பாடுகளுக்கும் இடையில் ஏதேனும் மாறுபாடு அல்லது ஒவ்வாமை இருக்கும் சந்தர்ப்பத்தில், இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகள் அத்தகைய சட்டத்தின் அல்லது ஒப்பந்தத்தின் மீது மேலோங்கி நிற்றலும் வேண்டும்.

(4) இவ்வொழுங்குவிதிகளானவை, நூறு ஏக்கர்களுக்குக் குறையாத விஸ்தீரணம் கொண்டதும், தேயிலை, ரப்பர், தெங்கு, கொக்கோ, ஏலம், மிளகு என்பவற்றில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்படவுள்ள பயிர்கள் பயிரிடப்பட்டுள்ளதுமான தோட்டம் ஒன்றன் பெயர் இடாப்பில் அவரின் பெயர் காணப்படும் வேலையாள் ஒவ்வொருவருக்கும், ஏற்புடையனவாதல் வேண்டும்.

(5) (அ) 1974 ஒகத்து 1 ஆந் தேதி தொடங்கி 1974 திசம்பர் 31 ஆந் தேதி முடிவடையும் காலம் தொடர்பில், அக்காலத்தின்போது ஆகக்குறைந்தது 90 வேலை நாட்களிலேனும் அத்தகைய வேலையாள் வேலைக்குத்தோற்றி, அவ்விதம் தோற்றுமிடத்து அவருக்கு வேலை வழங்கப்பட்டிருந்து, அவ்வாறு வேலை வழங்கப்பட்டுள்ள நாட்களில் அவர் வேலை செய்திருந்தால் ; அத்துடன்

(ஆ) (அ) என்னும் பந்தியில் குறிப்பிடப்பட்ட காலத்தின்பின்னர் ஆறு மாதங்களைக் கொண்ட ஒவ்வொரு காலப்பகுதி தொடர்பிலும், அத்தகைய ஒவ்வொரு காலப்பகுதியிலும் ஆகக் குறைந்தது 108 வேலைநாட்களிலேனும் அவர் வேலைக்குத் தோற்றி, அவ்விதம் வேலைக்குத் தோற்றும்போது வேலை வழங்கப்பட்டிருந்து, அவ்வாறு வேலை வழங்கப்பட்ட நாட்களில் வேலை செய்திருந்தால்,

இவ்வொழுங்குவிதிகள் ஏற்புடையவராகும் வேலையாள் ஒருவருக்குத் தொழில்தருநரினால் கூலியாகக் கொடுக்கப்படும் தொகை, உத்தரவாத ஆகக்குறைந்த தொகைக்குக் குறைந்ததாக இருத்தலாகாது.

6. ஐந்தாம் ஒழுங்குவிதியில் குறிப்பிடப்பட்ட ஏதேனும் காலப்பகுதியின் போது இவ்வொழுங்குவிதிகள் ஏற்புடையவராகும் வேலையாள் ஒருவர் அத்தகைய காலப்பகுதியினுள்ள வேலைநாட்களின் தொகை 90 அல்லது 108 க்கு குறைவாக இருப்பதன் காரணமாக மட்டும், விடயத்திற்கு ஏற்ப, 90 வேலை நாட்களுக்கேனும் அல்லது 108 வேலைநாட்களுக்கேனும் வேலைக்குத் தோற்றத் தவறுமிடத்து, அத்தகைய வேலையாள் அவ்விதம் வராது இருப்பினும் கூட உத்தரவாத ஆகக் குறைந்த தொகையைப் பெறுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

7. இவ்வொழுங்குவிதிகள் ஏற்புடையனவாகும் வேலையாளொருவரின் தொழில்தருநர் எவரும் தனியிதழ்ப் பெயர் இடாப்பொன்றை வைத்திருத்தல் வேண்டும் ; வேலைநாளொன்றில் வேலைக்கு வந்திருக்கும் வேலையாட்களின் பெயர்கள் அதில் பதியப்படுதல் வேண்டும். அத்தகைய பெயர் இடாப்பானது, தோட்டத்தில் வேலையாட்கள் எவ்விடத்தில் வேலைக்கென வந்திருப்பார்களோ அவ்விடத்தில் வைத்திருக்கப்படுதல் வேண்டு மென்பதுடன், அத்தொழில் தருநரினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழிற்சங்கத் தோட்டக்குழுவின் பிரதிநிதியினாலும் தோட்டத்திலுள்ள வேலையாள் எவரினாலும் பார்வையிடக்கூடியதாயிருத்தலும் வேண்டும்.

8. தொழில்தருநரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழிற்சங்கத்தின் தோட்டச் செயற்குழுவின் பிரதிநிதி ஒருவர், வேலையாட்கள் வேலைக்குத் தோற்றும்பொழுதும் வேலை முடிந்தபின்னரும் சேருகின்ற நேரங்களிலும் இடங்களிலும் அத்தோட்டத்தில் சமுகமாய் இருத்தற்கு உரிமையுடையவராதல் வேண்டும்.

9. (1) இவ்வொழுங்குவிதிகள் ஏற்புடையவராகும் வேலையாளொருவருக்கு 5 ஆம் ஒழுங்குவிதியில் குறிப்பிடப்பட்ட ஏதேனும் காலப்பகுதியின்போது தொழில்தருநரால் கூலியாகக் கொடுக்கப்பட்ட தொகையானது, உத்தரவாத ஆகக் குறைந்த தொகைக்குக் குறைவானதாக இருக்குமிடத்து, அத்தொழில் தருநர் அத்தகைய காலப்பகுதி முடிந்ததிலிருந்து 30 நாட்களுக்குப் பிந்தாது, உத்தரவாத ஆகக்குறைந்த தொகைக்கும் அத்தகைய காலப்பகுதியின்போது கூலியாகக் கொடுக்கப்பட்ட தொகைக்கும் இடையிலான வித்தியாசத்தை அத்தகைய வேலையாளுக்குக் கொடுத்தல் வேண்டும்.

(2) ஓராம் பந்தியின்கீழ் வேலையாளொருவருக்குக் கொடுக்கும்படி தேவைப்படுத்தப்பட்ட தொகையை அத்தகைய தொழில்தருநர் கொடுக்கத்தவறியமை காரணமான தவறொன்றுக்கு அத்தகைய தொழில்தருநர் நீதிமன்றம் ஒன்றினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், நீதிமன்றமானது, அத்தகைய தவறுக்கென அது விதிக்கும் வேறேதேனும் தண்டத்துக்கு மேலதிகமாக அத்தகைய கட்டளையிற் குறிப்பிடப்படும் காலத்தினுள் அத்தகைய வேலையாளுக்கு அத்தகைய தொகையைக் கொடுக்கும்படி அத்தகைய தொழில்தருநரைப் பணிக்கலாம் என்பதுடன், அத்தகைய தொகை அவ்வாறு கொடுக்கப்படாதவிடத்து அத்தகைய தொகை நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட குற்றப்பணம் என்றாற்போன்று நீதிமன்றக் கட்டளையின்மீது அறவிடப்படலாம்.

10. இவ்வொழுங்குவிதிகளில் சந்தர்ப்பம் வேறுவிதமாகத் தேவைப்படுத்தினாலன்றி, " ஆணையாளர் ", " தொழில்தருநர் " என்பன, முறையே (236 ஆம் அத்தியாயமான) கூலிச்சபைகள் கட்டளைச்சட்டத்திலுள்ள அதே கருத்துக்களைக் கொண்டுள்ளன.

" கூட்டுடன்படிக்கை " என்பது, கைத்தொழிற் பிணக்குகள் சட்டத்தில் உள்ள அதே கருத்தை உடையது ;

" நாளாந்த ஆகக்குறைந்த கூலி " என்பது, ஒரு வேலையாள் தொடர்பில்—

(அ) அவ்வேலையாள் எத்தொழிலைச் சேர்ந்தவரோ அத்தொழிலுக்கான கூலிச்சபையினால் விதிக்கப்பட்ட நாளாந்தக் கூலி ;

(ஆ) அவ்வேலையாளுக்குப் பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளின்கீழ் நாளொன்றுக்குக் கொடுக்கப்படவுள்ள ஏதேனும் தொகை ;

(இ) 1968 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, ஊழியர்க்கான இடைக்கால நாணய மதிப்பிறக்கப்படிச் சட்டத்தின்கீழ் அவ்வேலையாளுக்கு நாளொன்றுக்குக் கொடுக்கப்படவுள்ள ஏதேனும் தொகை ;

(ஈ) ஏதேனும் கூட்டுடன்படிக்கையின் ஏற்பாடுகளுக்கிணங்க, அல்லது அதன் அடிப்படையில் அவ் வேலையாளுக்கு நாளொன்றுக்குக் கொடுக்கப்படவுள்ள ஏதேனும் தொகை,

என்பவற்றின் கூட்டுமொத்தமெனப் பொருள்படும்.

" உத்தரவாத ஆகக்குறைந்த தொகை " என்பது—

(அ) 5 ஆம் ஒழுங்குவிதியின் (அ) என்னும் பந்தியில் குறிப்பிடப்பட்ட காலம் தொடர்பில், அத்தகைய காலப்பகுதியின்போது அவ்வேலையாள் பெறுவதற்கு உரித்துள்ள ஆகக்குறைந்த நாளாந்தக் கூலியின் சராசரியை 90 ஆல் பெருக்கிவரும் தொகைக்குச் சமமானது எனப் பொருள்படும் ;

(ஆ) 5 ஆம் ஒழுங்குவிதியின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பிடப்பட்ட 6 மாதங்களைக் கொண்ட ஒவ்வொரு காலப்பகுதி தொடர்பில், அத்தகைய ஒவ்வொரு காலப்பகுதியின் போதும் அவ்வேலையாள் பெறுவதற்கு உரித்துடைய ஆகக்குறைந்த நாளாந்தக் கூலியின் சராசரியை 108 ஆல் பெருக்கிவரும் தொகைக்குச் சமமானது எனப் பொருள்படும் ;

" வேலைநாட்கள் " என்பது, தோட்டம் ஒன்றன் தொடர்பில் வரும் பொழுது, தோட்டத்தில் வேலை செய்யப்படும் நாட்களெனப் பொருள்படும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது